Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.

Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

**Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.**
Bishop of Kottar

---

No. C-06/2021 03-03-2021

# அகில உலகப் பெண்கள் நாள்

***அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,***

ஆண்-பெண் பாலினச் சமத்துவத்தை உயர்வாகப் போற்றிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் அமைதியும் உங்களோடு தங்க வாழ்த்துகின்றேன்.

உலக அளவில் பெண்களுக்கெனக் கொண்டாடப்படும் சிறப்புநாளில் நாம் எல்லோரும் இணைந்துகொண்டாலும், வருகின்ற 14-03-2021 ஞாயிறன்று உலகப் பெண்கள் நாள் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றி அந்நாளை நமது மறைமாவட்டத்தில் சிறப்பிக்கின்றோம். இந்த ஆண்டினை நம் திருத்தந்தை பிரான்சிஸ் புனித யோசேப்பின் ஆண்டாக அறிவித்துள்ள பின்னணியில், தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழு **“புனித வளனின் வழியில் பெண்மையின் மாண்பைக் காப்போம்”** என்னும் மையக்கருத்தில் சிந்திக்கவும் வழிபாட்டினைக் கொண்டாடவும் அழைப்பு விடுக்கிறது.

இயேசுவின் இறையாட்சிப் பணிகளில் பெண்களின் மாண்பைக் காப்பது என்பது சிறப்பான அழுத்தம் பெற்றது என்பதற்கு எண்ணிறந்த எடுத்துக்காட்டுகளை நற்செய்தியில் நாம் காணலாம். அவ்வழுத்தத்திற்கு வலுசேர்க்கும் விதமாகத் தனது 12 சீடர்களுக்கு இணையாகப் பெண்களையும் அணிசேர்த்திருந்தார் என்பதை அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு லூக்கா நற்செய்தியாளர் விரிவாகப் பதிவு செய்துள்ளார் (லூக். 8:1-3). பாலினச் சமத்துவம் பற்றிய இயேசுவின் இந்த நிலைப்பாடு பெண்களை ஒரு பொருட்டாகவே கருதாத அன்றைய யூதச் சமூகத்திற்கு ஒரு மாற்றுநிலைப்பாடாகவும் செயல்பாடாகவும் இருந்தது மட்டுமன்றி அச்சமூகத்திற்குப் பெரும் சவாலாகவும் இருந்தது

எனக் கூறலாம். அது மட்டுமன்றி, பெண்களைத் தொட்டு நலப்படுத்தியதும் (மாற் 1:31; 5:27-34) இறையாட்சிப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தியதும் (யோவா 4:39; 20:17-18) அவர்களுடைய நம்பிக்கையைப் பாராட்டியதும் (லூக் 7:50; மத் 15:28) இன்றும் நாம் இயேசுவிடம் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடங்கள்.

நமது கோட்டாறு மறைமாவட்டம் இயேசுவின் இறையாட்சிப் பார்வையைக் கடந்த காலங்களில் செயலாக்குவதில் எடுத்துக்கொண்ட பல முன்னெடுப்புக்களில் ஒன்றுதான் 1989ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பெண்கள் பணிக்குழு. இப்பணிக்குழு அன்று முதல் செய்துவரும் பணிகளைப் பாராட்டுகின்றேன்.

மறைமாவட்டத்தில் மட்டுமன்றி நாம் வாழும் பரந்துபட்ட சமூகத்திலும் பெண்கள் இயக்கங்கள் பல செயல்பட்டு வருகின்றன. குமரி மாவட்டப் பெண்கள் கூட்டுக்குழு, மாதர் சங்கங்கள் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். பெண்களை ஆற்றல்படுத்தி சமூக அநீதிகளையும் அவலங்களையும் ஒழிக்கப் போராடும் இந்த இயக்கங்களோடு கைக்கோத்து நாம் கூட்டாக இயங்கும் தேவை இக்காலத்தில் மிக அதிகமாக உள்ளது.

இந்தியத் தலைநகர் புதுடில்லி எல்லைகளில் கடந்த 100 நாள்களுக்கும் மேலாக எழுச்சியோடு போராடிவரும் விவசாயிகள் இயக்கத்திற்குக் கூடுதல் ஆற்றல் சேர்த்திருக்கிறார்கள் பல ஆயிரக்கணக்கான விவசாயப் பெண்கள். இப்போராட்டத்தை அச்சம் தவிர்த்து உலகச் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்ததில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கிரேட்டா தன்பெர்க், நமது நாட்டைச் சேர்ந்த 22 வயதான பருவநிலை ஆர்வலர் டிஷா ரவி, பார்படோஸ் நாட்டைச் சார்ந்த 33 வயதான ராபின் ரிஹான்னா என்ற இசைக்கலைஞர் போன்ற இளம் பெண்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். கடந்த பல நூற்றாண்டுகளாக உலக வரலாற்றில் இறவா இடம்பிடித்துள்ள பலநூறு வீரப் பெண்மணிகளின் வரிசையில் இப்பெண்களும் இவர்களோடு இன்னும் பலரும் சேர்ந்துள்ளார்கள். “விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்போம்” என்ற மகாகவி பாரதியின் சூளுரையை இப்பெண்கள் வீரத்துடன் ஏற்றுள்ளார்கள் எனலாம்.

நமது குமரி மாவட்டம் மற்றும் கோட்டாறு மறைமாவட்டத்திலும் பல பெண்கள் பஞ்சாயத்துத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்று சமூகக் காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது பெருமைக்குரியது, பாராட்டுதலுக்குரியது. எனினும், திரு அவையில் நமது பங்குகளிலுள்ள நிர்வாகப் பொறுப்புகளில் பெண்கள் பங்கேற்கத் தடைகளும், தயக்கங்களும் நிலவி வருவது ஏற்புடையதன்று. அது சீர்செய்யப்பட அனைவரும் முன்வர வேண்டும் என நான் அழைப்பு விடுக்கின்றேன்.

விவிலிய பாரம்பரியத்தில், இயேசுவின் பெண் சீடர்களைப் போன்று பழைய ஏற்பாட்டு ஆண் ஆதிக்கக் காலத்தில் முன்னணித் தலைமையேற்ற சாரா, ரெபேக்கா, தெபோரா மற்றும் எஸ்தர் போன்ற பெண் தலைவர்களும் தொடக்ககால திரு அவையில் பவுலடியாரின் நற்செய்திப் பயணங்களின்போது கொரிந்துத் திரு அவையில் பணியாற்றிய குலோயி (1 கொரி 1:11) மற்றும் பிரிஸ்கில்லா (திப 18:1) என்ற பெண்களைப் போன்றும் பவுலடியார் நற்சான்று வழங்கிய பெண் திருத்தொண்டர் பெயிபா (உரோ 16:1) போன்றும் பல பெண்கள் நமது பங்குத்தளங்களில் உருவாக வேண்டும்.

வளமிக்க இறையாட்சியின் முன் அடையாளங்களாக நமது திரு அவையும் சமூகமும் உருமாற வேண்டும் என இறைவனை வேண்டி அகில உலகப் பெண்கள் நாள் வாழ்த்துகளை அனைவருக்கும் உளமாரக் கூறி மகிழ்கின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

**+ நசரேன் சூசை**
கோட்டாறு ஆயர்

**குறிப்பு:** 07-03-2021 அன்று ஞாயிறு திருப்பலியில் இச்சுற்றுமடல் மறைமாவட்ட ஆலயங்களிலும் துறவற இல்லங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.